# பெப்ரவரி - 10 - வெள்ளி

புனித ஸ்கொலஸ்திக்கா

எவரது குற்றம் மன்னிக்கப்பட்டதோ, எவரது பாவம் மறைக்கப்பட்டதோ, அவர் பேறு பெற்றவர்.திபா. 32:1

-------------------------------------------------------------------

## முதல் வாசகம்: தொடக்க நூல் 3 : 1 – 8

ஆண்டவராகிய கடவுள் உருவாக்கிய காட்டு விலங்கு களிலெல்லாம் பாம்பு மிகவும் சூழ்ச்சிமிக்கதாக இருந்தது. அது பெண்ணிடம், ”கடவுள் உங்களிடம் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக்கூடாது என்றது உண்மையா?” என்று கேட்டது. பெண் பாம்பிடம், ”தோட்டத்தில் இருக்கும் மரங்களின் பழங்களை நாங்கள் உண்ணலாம். ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை மட்டும் நீங்கள் உண்ணக்கூடாது அதைத் தொடவும் கூடாது. மீறினால் நீங்கள் சாவீர்கள் என்று கடவுள் சொன்னார்”, என்றாள். பாம்பு பெண்ணிடம், ”நீங்கள் சாகவே மாட்டீர்கள். ஏனெனில் நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் கடவுளைப் போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும்” என்றது. அந்த மரம் உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும் அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததைக் கண்டு, பெண் அதன் பழத்தைப் பறித்து உண்டாள். அதைத் தன்னுடனிருந்த தன் கணவனுக்கும் கொடுத்தாள். அவனும் உண்டான். அப்பொழுது அவர்கள் இருவரின் கண்களும் திறக்கப்பட்டன் அவர்கள் தாங்கள் ஆடையின்றி இருப்பதை அறிந்தனர். ஆகவே, அத்தி இலைகளைத் தைத்துத் தங்களுக்கு ஆடைகளைச் செய்து கொண்டனர். மென்காற்று வீசிய பொழுதினிலே, தோட்டத்தில் ஆண்டவராகிய கடவுள் உலவிக்கொண்டிருந்த ஓசை கேட்டு, மனிதனும் அவன் மனைவியும் ஆண்டவராகிய கடவுளின் திருமுன்னிருந்து விலகி, தோட்டத்தின் மரங்களுக்கு இடையே ஒளிந்து கொண்டனர்.

**பதில்பாடல்:** எவரது குற்றம் மன்னிக்கப்பட்டதோ அவர் யேறு பெற்றவர்

## நற்செய்தி: மாற்கு 7: 31 – 37

அக்காலத்தில், மீண்டும் இயேசு தீர் பகுதியை விட்டு, சீதோன் வழியாகச் சென்று தெக்கப்பொலி பகுதி நடுவே வந்து, கலிலேயக் கடலை அடைந்தார்.காது கேளாதவரும் திக்கிப்பேசுபவருமான ஒருவரைச் சிலர் அவரிடம் கொண்டு வந்து, அவர்மீது கைவைத்துக் குணமாக்குமாறு அவரை வேண்டிக் கொண்டனர். இயேசு அவரைக் கூட்டத்திலிருந்து தனியே அழைத்துச் சென்று, தம் விரல்களை அவர் காதுகளில் இட்டு, உமிழ்நீரால் அவர் நாவைத் தொட்டார்.பிறகு வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சு விட்டு, அவரை நோக்கி ”எப்பத்தா” அதாவது ”திறக்கப்படு” என்றார்.உடனே அவருடைய காதுகள் திறக்கப்பட்டன. நாவும் கட்டவிழ்ந்தது. அவர் தெளிவாகப் பேசினார்.இதை எவருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்கு அவர் கட்டளையிட்டார். அவரது கட்டளைக்கு நேர்மாறாக இன்னும் மிகுதியாய் அவர்கள் அதை அறிவித்து வந்தார்கள்.அவர்கள் அளவு கடந்த வியப்பில் ஆழ்ந்தவர்களாய் ”இவர் எத்துணை நன்றாக யாவற்றையும் செய்து வருகிறார்! காதுகேளாதோர் கேட்கவும் பேச்சற்றோர் பேசவும் செய்கிறாரே!” என்று பேசிக்கொண்டார்கள்.

**தியானம்:** இன்றைய இறைவார்த்தைகள் நாம் தியானிக்கும் போது இறைமகன் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலங்களில் மக்கள் மத்தியில் அவர் செய்து வந்த புதுமைகளையும், அதிசயங்களையும், அற்புதங்களையும் இங்கு காணக்கூடியதாக உள்ளது அவர் கலிலேயக் கடலை அடைந்த போது அங்கு காது கேளாதவரும், திக்கிப் பேசுபவருமான அந்த மனிதனை இயேசுவினிடத்தில் கொண்டு வந்து அவர் மீது கை வைத்து குணமாக்குமாறு அங்கு கூடியிருந்த மக்கள் இயேசுவை வேண்டிக்கொண்டார்கள். இயேசு அவர் மீது இரங்கி வானத்தை அண்ணாந்து பார்த்து அவரை நோக்கி “எப்பத்தா” அதாவது ‘திறக்கப்படு’ என்றார். உடனே அவருடைய காதுகள் திறக்கப்பட்டன: நாவும் கட்டவிழ்ந்தது. இவ்வாறு இறைமகன் தம் வல்லமையை வெளிப்படுத்தினார். உடலில் ஓர் ஊனம் உள்ளவர்கள் எப்படியான வேதனைகளை அனுபவிப்பார்கள் அவர்களால் தம்முடைய அன்றாட காரியங்களையும் தாமாகவே செய்து கொள்ள முடியாதவர்களாக இருப்பார்கள் இப்படியானவர்கள் எத்தனை பேர் எம் நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் அவர்களின் குறைகளை நிறைவாக்குவதற்கு எம்மால் முடிந்த உதவிகளை செய்வதற்கு நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா? நாம் எமது தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்யாமல் இப்படியான குறைபாடுள்ள மக்களுக்கும் எம்மால் முடிந்த உதவிகளை செய்வதற்கு இப்புதிய ஆண்டில் நாம் முயற்சி எடுப்போம், இப்புதிய ஆண்டினை தந்த இறைவனுக்கு நன்றி கூறுவோம் ஆமென்.